செ.வெ.எண் 242

## அரசு செய்திக் குறிப்பு – 15.5.2009

## பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மூன்றாம் கட்டமாக 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெற ஏறத்தாழ 7 கோடி ரூபாய் மதிப்புடைய நிவாரணப் பொருட்கள் இலங்கை சென்றடைந்தன

### தமிழக அரசு அறிவிப்பு

ஏற்கனவே இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் பொருட்டு, தமிழக அரசின் சார்பில் இரண்டு கட்டங்களாக, நிவாரணப் பொருட்கள் அடங்கிய 80 ஆயிரம் சிப்பங்கள் 13.11.2008ம் நாளும், 40 ஆயிரம் சிப்பங்கள் 22.4.2009 நாளன்றும் கப்பல்கள் மூலம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டு, அவை இலங்கையில் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் குடும்பங்களுக்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக விநியோகிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு கூடுதலாக இடம் பெயர்ந்து வந்து சேர்ந்துள்ள இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகிப்பதற்காக, மூன்றாம் கட்டமாக, சுமார் 7 கோடி ரூபாய் மதிப்புடைய நிவாரணப் பொருட்கள் அடங்கிய 50 ஆயிரம் சிப்பங்கள் இலங்கைக்கு 09.5.2009 நாளன்று அனுப்பிவைக்கப்பட்டன. இதில் வழக்கமாக அனுப்பப்படும் அரிசி, பருப்பு, சர்க்கரை, தேயிலை, சோப்பு, பற்பசை, சேலை, பெண்களுக்கான ஆயத்த ஆடை, வேட்டி, கைலி, துண்டுகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவற்றுடன், முதலுதவி செய்வதற்கான பிளாஸ்டர் சுருள், மருந்து தடவப்பட்ட பிளாஸ்டர், கட்டு கட்டும் துணி, பஞ்சு மற்றும் தண்ணீர் சுத்திகரிக்கும் மாத்திரைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 09.5.2009ஆம் நாள் முற்பகல் 11 மணியளவில் MSC "ஹிமாலயா" என்ற கப்பல் மூலம், இந்த நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இவை ஏற்கனவே கொழும்பு துறைமுகத்தை சென்றடைந்து, இந்திய தூதரக அதிகாரிகளினால் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. கூடுதலாக இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு, இவை விரைவில் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தினரால் விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்கள், துணி வகைகள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவை போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றது பேருதவியாக அமைந்தது என்ற தகவலும் வெளியுறவு அமைச்சகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Secretary to Government
Public and Rehabilitation Dept.
Secretariat, Chennai-600 009

2/2

[illegible], இயக்கு...
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9